FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318770

1. District : திருப்பத்தூர் PS: உமிழ் தடுப்பு மற்றும் Year: 2026 FIR No.: 7/2026 Date: 28.08.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: Act, 1988 (as amended in Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: 2018 by Act 16 of 2018) Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 20.01.2025 Date to : 27.08.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to : 15.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 28.08.2026 Time : 17.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.08.2026 Vol. (2) நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மாதனூர் உழவர் சந்தை அருகில் அலுவலகம் சுமார் 55 கி.மீ. வடகிழக்கு

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. S. சுந்தரேசன் (b) Father's/ Husband's Name : K. திவானந்தம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 1970 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : அய்யாக்கண்ணு அலுவலகம், வெலூர், ஒராணிப்பேட்டை, திருப்பத்தூர்
தொழில் அய்யாக்கண்ணு முகவரி உள்ளும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வெலூர்-9.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திரு. P.P. திருகன், உதவி இயக்குநர் (மாவட்டங்கள்) திருப்பத்தூர் மாவட்டம் (2) திரு. N. நாகராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் (Village Panchayat), மாதனூர் ஒன்றியம். (3) திரு. உமாசங்கர் பஞ்சாயத்து செயலாளர், அலங்கிப்பட்டு பஞ்சாயத்து.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— காரணம் —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet. if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

/

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/03/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

28/03/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28/03/2026 at 18.00hrs.

Name: பெயர் T. Raju
Rank: நிலை DSP No. எண் .....
V+A.C, Tirupattur

F.I.R Contents in Vigilance and Anti-Corruption, Tirupathur Detachment Crime No.7/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018).

பணிந்தனுப்பப்படுகிறது

இன்று (28.08.2026) மாலை 05.00 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது, திரு.S.நந்தகுமார், ஆய்வுக் குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகாரில் குறிப்பிட்டிருந்த நபர்கள்மீது திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 7/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018) ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு விவரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.S.நந்தகுமார், ஆய்வுக் குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. கைப்பேசி எண்-9488646949 பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பத்தூர் மாவட்டம். ஐயா, நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நேற்று (27.08.2026) பணியில் இருந்தபோது, திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளருக்கு கிடைத்த நம்பகமான இரகசியத் தகவலின்படி, திருப்பத்தூர் மாவட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.P.P.முருகன் அவர்கள் ஊராட்சி செயலாளர்களிடமிருந்து அடிக்கடி லஞ்சப் பணம் பெற்று வருவதாகவும், அன்றைய தினம் மாதனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கூட்டம் நடத்த வருவதாகவும், வரும் வழியிலும் லஞ்சப் பணம் பெறுவதாகவும் கிடைத்த தகவலை எனக்கு தெரிவித்ததன் பேரில், மதியம் சுமார் 14.15 மணியளவில் செட்டியப்பனூர் ஜங்ஷன் அருகே காத்திருந்த என்னை காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் அரசு வாகனத்தில் அழைத்துக் கொண்டு, மேற்படி இரகசியத் தகவலின் விவரங்களை நேரிலும் காவல் துணை கண்காணிப்பாளர் தெரிவித்தார். பின்னர் மதியம் சுமார் 15.15 மணியளவில் மாதனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் தேசிய நெடுஞ்சாலையில் ஓரமாக வாகனம் நிறுத்தப்பட்டு ரகசிய தகவலாளரை விசாரித்தபோது, மேற்படி திரு.முருகன் அவர்கள் திருப்பத்தூரிலிருந்து கூட்டத்திற்கு வரும் வழியில் ஏற்கனவே சில நபர்களிடம் லஞ்சப் பணம் பெற்று அவரது அரசு வாகனத்தில் வைத்திருப்பதாக தெரிவித்ததன் பேரில், தேசிய நெடுஞ்சாலையில் மாதனூரிலிருந்து திருப்பத்தூர் செல்லும் மார்க்கத்தில் உள்ள சர்வீஸ் சாலையில் அரசு வாகனம் நிறுத்தப்பட்டு, ரகசிய தகவலாளர் மூலம் தொடர்ந்து கண்காணிக்க, மதியம் சுமார் 15.30 மணியளவில் உதவி இயக்குநர்

(ஊராட்சிகள்) திரு.முருகன் அவர்கள் மாதனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்தார். இதுகுறித்து ரகசிய தகவலாளரிடம் விசாரித்தபோது, கூட்டம் இன்னும் தொடங்கவில்லை என்றும், அனைவரும் கூட்ட அரங்கில் இருப்பதாகவும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்த உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.முருகன் அவர்கள் திடீரென அவரது வாகனத்தை எடுத்துக்கொண்டு புறப்படுவதாகவும் தகவல் தெரிவித்தார். எனவே, உடனடியாக காவல் குழுவினருடன் சென்று, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் வாகனத்தை மாதனூரிலிருந்து திருப்பத்தூர் செல்லும் மார்க்கத்தில் தேசிய நெடுஞ்சாலையின் சர்வீஸ் சாலையில் தடுத்து நிறுத்தப்பட்டு, அவரிடம் திடீர் சோதனை மேற்கொள்ள வந்திருப்பது தொடர்பான தகவல் தெரிவிக்கப்பட்டு, பதிவு எண் TN 83 MG 0047 என்ற அவரது அரசு வாகனத்துடன் அவரை மாதனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்குள் அழைத்து வரப்பட்டு, கூட்டம் நடைபெற்ற அறையின் முன்பு திரு.P.P.முருகன் அவர்களின் அரசு வாகனம் நிறுத்தப்பட்டது. கூட்ட அரங்கில் இருந்தவர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்காக வந்திருப்பது குறித்து தெரிவித்து, அனைவரையும் அவரவர் இடங்களில் இருக்கையில் அமரச் செய்தோம். பின்னர் திருப்பத்தூர் மாவட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.P.P.முருகன் அவர்களின் அரசு வாகனத்தை சோதனை செய்தபோது, பின்புற இருக்கையில் இருந்த கிரே நிற லஞ்ச் பேக்கில் சைடு ஜிப்பில் தனித்தனியாக இரண்டு தபால் கவர்களில் தலா ரூ.5,000/- வீதம் ரூ.10,000/- மற்றும் தனியாக ரூ.9,000/- என மொத்தம் ரூ.19,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரித்தபோது, தன்னுடைய அம்மாவின் மருத்துவச் செலவிற்காக அப்பணத்தை வைத்திருப்பதாக தெரிவித்தார். பணமானது லஞ்ச் பேக்கில் தனித்தனியாக இரண்டு தபால் கவர்களிலும் மற்றும் அதனுடன் சைடு ஜிப்பில் மற்ற பணமும் வைக்கப்பட்டிருந்ததால், அம்மாவின் மருத்துவ செலவிற்கு வைத்திருப்பதாக அவர் சொன்ன விளக்கம் நம்பத்தகுந்ததாக இல்லாததால், மேற்படி ரூ.19,000/- இலஞ்ச பணமாக இருக்கலாம் என்று விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், அவரது சட்டைப் பையில் இருந்த மணிபர்சை சோதனை செய்தபோது ரூ.1,670/- இருந்தது. அத்தொகை தனது சொந்த செலவிற்கானது என அவர் தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்தொகை அவரிடமே திருப்பி வழங்கப்பட்டது. தொடர்ந்து, அவரிடம் விசாரித்தபோது, தனது பெயர் திரு.P.P.முருகன், வயது 53, தந்தை பெயர் பாண்டுரங்கன் என்றும், 07.02.2024 முதல் திருப்பத்தூர் மாவட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, கூட்ட அரங்கில் இருந்த திரு.N.சங்கர், வட்டார வளர்ச்சி அலுவலர் (Village Panchayats), மாதனூர் அவரிடம் விசாரித்தபோது, குடிநீர் வரி மற்றும் இதர வரிகளை முறையாக வசூலிப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்று வருவதாக

தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது ரூ.290/- இருந்தது. அது தனது சொந்த பணம் என தெரிவித்ததால், அத்தொகை அவரிடமே திருப்பி வழங்கப்பட்டது. மேலும், அவரை விசாரிக்க கடந்த 03.08.2026 முதல் மாதனூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அதற்கு முன்பு 20.01.2025 முதல் 31.07.2026 வரை ஜோலார்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரிந்ததாகவும் தெரிவித்தார். அதைத்தொடர்ந்து, அவரது கைபேசியில் Google Pay உள்ளிட்ட பணப் பரிவர்த்தனைகளை சோதனை செய்தபோது, சந்தேகத்திற்கிடமான பல பணப் பரிமாற்றங்கள் இருந்தது. குறிப்பாக, அவருடைய 9789788234 என்ற எண்ணிற்கு 9003018099 என்ற கைபேசி எண்ணிலிருந்து, டிஎன் ரவிகுமார் என்பவரால் 04.04.2025 அன்று ரூ.15,000/-, 22.09.2025 அன்று ரூ.15,000/-, 21.11.2025 அன்று ரூ.6,000/-, 09.05.2026 அன்று ரூ.25,000/- மற்றும் 23.07.2026 அன்று ரூ.10,000/- என மொத்தம் ரூ.71,000/- பணம் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. மேற்படி கைபேசி எண் யாருடையது என விசாரித்தபோது, அது ஜோலார்பேட்டை பஞ்சாயத்து யூனியனில் ஒப்பந்த பணிகள் செய்து வரும் திரு.ரவிகுமார் என்றும், அவர் தன்னிடம் கட்டுமானப் பொருட்கள் வாங்கியதாகவும், அதற்கான தொகையை அனுப்பியதாகவும் தெரிவித்தார். மேலும், 9787578415 என்ற கைபேசி எண்ணிலிருந்து அவரது 9789788234 என்ற கைபேசி எண்ணிற்கு 23.03.2026 அன்று ரூ.8,000/-, 10.04.2026 அன்று ரூ.9,000/-, 05.05.2026 அன்று ரூ.10,000/- மற்றும் 25.06.2026 அன்று ரூ.4,000/- என ராஜேஷ்குமார் என்பரிடமிருந்து மொத்தம் ரூ.31,000/- பணம் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. மேற்படி பணப் பரிமாற்றங்கள் தொடர்பாக விசாரித்தபோது, அந்த ராஜேஷ்குமார் என்ற நபரும் ஜோலார்பேட்டை பஞ்சாயத்து யூனியனில் ஒப்பந்த பணிகள் செய்து வரும் ஒப்பந்ததாரர் என்றும், அவர் தனது நண்பர் என்றும், அவரிடமிருந்து கடனாக மேற்படி பணத்தை பெற்றதாகவும் தெரிவித்தார். மேலும், மேற்படி கடன் தொகையை திரும்ப ஏதேனும் ஆன்லைன் பணப் பரிமாற்றம் மூலம் அனுப்பியுள்ளீர்களா என விசாரித்தபோது, தான் ஆன்லைன் மூலம் மட்டுமே கடன் தொகையை பெற்றுக்கொள்வதாகவும், அதனை திருப்பிச் செலுத்தும்போது கையில் ரொக்கமாக வழங்கிவிடுவதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத நிலையில், மேற்கண்ட ரவிக்குமார் என்பவரிடமிருந்து பெறப்பட்ட ரூ.71,000/- மற்றும் ராஜேஷ்குமார் என்பவரிடமிருந்து பெறப்பட்ட ரூ.31,000/- என மொத்தம் ரூ.1,02,000/- மதிப்பிலான பணப் பரிவர்த்தனைகள் இலஞ்சமாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்று சந்தேகப்படும்படியாக இருந்தது. பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.உமாசங்கர், வயது 55, தந்தை பெயர் கமலநாதன், ஆலங்குப்பம் பஞ்சாயத்து செயலாளர், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரை

விசாரித்தபோது, அவரிடம் ரூ.7,070/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரித்தபோது, தனது நிலத்தில் உள்ள தென்னை மரங்களில் கிடைக்கும் தேங்காய்களை விற்பனை செய்த வகையில், பாபு என்பவரிடமிருந்து இரண்டு நாட்களுக்கு முன்பு ரூ.7,000/- வாங்கியதாகவும் அதனை தனது மகள் கல்வி சம்மந்தமாக கட்டணம் செலுத்த வைத்திருப்பதாகவும், மீதமுள்ள ரூ.70/- தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவர் சொன்னதை சரிபார்க்கும் பொருட்டு, உமாசங்கரின் கைபேசியிலிருந்து திரு.பாபு என்பவரின் கைபேசி எண் 9943626651-க்கு தொடர்பு கொண்டு விசாரித்தபோது, பாபு என்பவர் உமாசங்கருக்கு அவரது தென்னந்தோப்பை குத்தகைக்கு எடுத்து தொடர்பாக கடந்த 15 நாட்களுக்கு முன்புதான் ரூ.15,000/- வழங்கியதாகவும், அதன்பிறகு எவ்வித பணமும் வழங்கவில்லை என்றும் தெரிவித்தார். இதுகுறித்து திரு.உமாசங்கரிடம் மீண்டும் விசாரித்தபோது, அவர் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை தெரிவித்தார். எனவே, திரு.உமாசங்கர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாததால், அவரிடம் இருந்த ரூ.7,000/- இலஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணமாக இருக்கலாம் என சந்தேகப்படும்படியாக இருந்ததால் ரூ.7,000/- (500X12) and (100X10) மட்டும் கைப்பற்றப்பட்டு ரூ.70/- மட்டும் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. பணம் கைப்பற்றப்பட்ட நபர்களான திரு.முருகன் மற்றும் திரு.உமாசங்கர் ஆகியோரிடம் தனித்தனியாக விளக்க கடிதம் பெறப்பட்டது. இதனை தொடர்ந்து, கூட்ட அரங்கில் இருந்த மற்ற 50 நபர்களிடம் தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்களிடம் இருந்த பணத்திற்கு உரிய முகாந்திரம் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கம் அளிக்கப்பட்டதால், அவர்களிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும், அலுவலகத்திலிருந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சூரவேல் மற்றும் திரு.சங்கர் ஆகியோர்களின் அரசு வாகனங்களை சோதனை செய்யப்பட்டதில், சந்தேகத்திற்கிடமான பணம் அல்லது பொருட்கள் எதுவும் இல்லை. மேற்படி இருதுறை கூட்டு திடீர் சோதனையானது 27.08.2026 ஆம் தேதி மாலை சுமார் 15.30 மணியளவில் தொடங்கி, இரவு சுமார் 22.45 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையின்போது தயாரிக்கப்பட்ட மகஜரின் நகல்கள் திரு.P.P.முருகன் மற்றும் திரு.உமாசங்கர் ஆகியோருக்கு தனித்தனியாக வழங்கப்பட்டு, அவர்களிடமிருந்து உரிய ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி இருதுறை கூட்டு திடீர் சோதனையில், திருப்பத்தூர் மாவட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.P.P.முருகன் அவர்களின் அரசு வாகனத்தில் இருந்த லஞ்ச் பேக்கிலிருந்து உரிய முகாந்திரம் தெரிவிக்கப்படாத ரூ.19,000/- மற்றும் ஆலங்குப்பம் பஞ்சாயத்து செயலாளர் திரு.உமாசங்கர் அவர்களிடமிருந்து உரிய முகாந்திரம் கூறாத பணம் ரூ.7,000/- மற்றும் மாதனூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (Village Panchayats) திரு.N.சங்கர் அவர்களின் கைபேசியில் Google Pay பணப்

பரிவர்த்தனை மூலம் ஒப்பந்ததாரர்களான திரு.ரவிகுமார் மற்றும் திரு.ராஜேஷ்குமார் ஆகியோரிடமிருந்து முறையே ரூ.71,000/- மற்றும் ரூ.31,000/- என மொத்தம் ரூ.1,02,000/- பெறப்பட்டிருப்பது ஆகியவை இலஞ்ச பணமாக இருக்கலாம் என்று நம்பும்படியாக உள்ளது. எனவே, சோதனையில் கைப்பற்றப்பட்ட ரூ.26,000/- பணம், சந்தேகத்திற்கிடமான ரூ.1,02,000/- பணப் பரிவர்த்தனை விவரங்கள் பதிவு செய்யப்பட்ட இருதுறை தீடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் விளக்கக் கடிதங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். இது சம்மந்தமாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) திரு.S.நந்தகுமார் 28.08.2026 ஆ.கு.ஆய்வாளர் O/o ஆ.கு.அலுவலகம் வேலூர். Sir, Received the complaint on 28/08/2026 at 17.00 hrs and registering a case in Tirupathur V&AC Crime No.7/2026 U/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018 by Act 16 of 2018). (Sd) ஜெ.ராஜ 28/08/2026 DSP, V&AC, Tirupathur.

The original FIR is submitted to the Hon'ble District and Sessions Judge, Tirupathur along with original complaint petition, original Proceedings prepared for Joint Surprise Check conducted on 27.08.2026 and original explanation letters, dated 27.08.2026, given by Tr.P.P.Murugan and Tr.K.Umasankar, and the copies are sent to the officers concerned.

28/08/2026

Dy. Supdt. of Police
V & A.C., Tirupathur
Tirupathur Dt.